விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 கார்த்திகை 12 ரபி-அவ். 3 இதழ் 285
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 27-11-84

## மக்கள்வங்கி கிளையில் ரூ. 3,50,000 கொள்ளை

(இரா. உதயகுமார்)

அக்கரைப்பற்று மக்கள்வங்கிக்கிளையில் 3 லட்சத்து 70 ஆயிரம் ரூபா துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 9-30 மணியளவில் இயந்திரத்துப்பாக்கி சகிதம் வந்த இனந்தெரியாத 7 நபர்கள் முதலில் அங்கு நின்ற இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளின் துப்பாக்கிகளை பறித்து எடுத்ததாகவும் அதன் பின்னர் காசாளரைப் பயமுறுத்தி இக் கொள்ளையை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

துப்பாக்கிநபர்கள் சைக்கிளில் வந்தனராம்.

அரசாங்க ஊழியர்களுக்கு நேற்று சம்பளநாள் ஆகும்.

## சம்பளப்பணம் ரூ. 81,000!

(மன்னார்)

மன்னார் ஆஸ்பத்திரி ஊழியர்களின் சம்பளப் பணம் எண்பத்தோராயிரம் ரூபா துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டது.

நேற்றுக்காலை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருந்த போது இரண்டு துப்பாக்கி இளைஞர்கள் இக்

(6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க

# கந்தப்பளையில் 7 பேர் கைது!

# ஆயுதங்களும் கண்டுபிடிப்பு!

(கந்தப்பளை)

**கந்தப்பளையிலுள்ள ஒரு தேயிலைத் தோட்டத்தில் இராணுவத்தினரும் பொலிஸாரும் நேற்றுக் காலை நடத்திய திடீர்ச் சோதனையில், ஏழு பேர் கைதானார்கள். இவர்களிடமிருந்து மூன்று இயந்திரத் துப்பாக்கிகள், இரண்டு சாதாரண துப்பாக்கிகள், ஐந்து கைக் குண்டுகள் வெடிமருந்துகள் பெருந்தொகையான தோட்டாக்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.**

தேயிலைத் தோட்டத்தில் உள்ள மரக்கறித் தோட்டத்துக்கு அருகில் மேற்படி ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக விசாரணையில் தெரிய வந்தது.

இரகசியத்தகவலொன்றைத் தொடர்ந்தே மேற்படி சோதனை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நுவரேலியா மாவட்டத்திலுள்ள கந்தப்பளையில் 'நோனு தோட்டம் என்று அழைக்கப்படும் தேயிலைத்தோட்டத்திலேயே மேற்படி சம்பவம் நிகழ்ந்தது.

பெருந்தொகையான தோட்டாக்களும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து நுவரேலியா மாவட்டம் முழுவதிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நுவரேலியா பொலிஸ்நிலையத்தின் பாதுகாப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பலப்படுத்தப்பட்டது வாசகர்

[6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## ஊரடங்கு சட்டம் மாணவர் பெரிதும் பாதிப்பு

[ஏ வி. மாணிக்கம்]

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியமாவட்டங்களில் மாலை 4 மணி தொடக்கம் அடுத்தநாள் அதிகாலை 6 மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால் பாடசாலைகளின் மாணவர்கள் குறிப்பிட்ட

[3-ம் பக்கம் 4-கலம் பார்க்க)

## கிழக்கிலும் ஊரடங்கு

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டம் கிழக்கு மாகாணத்திலும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி: மாலை நான்கு மணி முதல் அடுத்த நாட்காலை ஆறு மணிவரை

வவனியா, மன்னார், மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய பகுதிகள்: இரவு ஆறு மணி முதல் அடுத்தநாள் காலை ஆறு மணி வரை.

## கொழும்புக் கடலில் மர்மப் படகு

### படையினர் உஷார் நிலையில்

(கொழும்பு)

கொழும்பில் சகல பொலிஸ் நிலையங்களும் பாதுகாப்புப் படையினரும் நேற்று முன்தினம் உஷார்படுத்தப்பட்டனர்.

கொழும்பிலுள்ள சில முக்கிய கேந்திரநிலையங்களைத் தாக்க தீவிரவாதிகளின் தற்கொலைப்படையொன்று திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து இந்த ஏற்பாடுசெய்யப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு துறைமுகத்துக்கு அருகே பல இளைஞர்கள் மர்மப்படகு ஒன்றில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடற்படையினர் தேடுதல் நடத்தியதாகத்தெரிவிக்கப்பட்டது,

(6ம் பக்கம் 3ம்கலம் பார்க்க)

## பொலிஸாருக்கு புதிய உத்தரவு

வடக்கு-கிழக்கு பகுதிகளிலுள்ள பொலிஸ்நிலையங்களில் கடமையாற்றும் தமிழ்ப் பொலிஸார் கடமையாற்றும் நாட்களில் அப் பொலிஸ் நிலையங்களிலேயே தங்கியிருக்கவேண்டுமென்று மேலிடத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது

சாவகச்சேரி பொலிஸ்நிலையம் தாக்குதலுக்குள்ளானதைத் தொடர்ந்து மேற்படி உத்தரவு விடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (மா)

## பிரசுரம்மூலம் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

அதிரடித் தாக்குதலின் போது உயிர்நீத்த ஜெரூட் நியூட்டனுக்கு (நிக்லஸ்) அஞ்சலி செலுத்துவதாகத் தெரிவித்து தமிழ் ஈழ விடுதலை இயக்கம் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

(6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க]

## இரவு 8-30 முதல் காலை 5-30 வரை மின்தடை

[யபழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் நேறறிரவு எட்டரை மணி முதல் இன்று காலை ஐந்தரை மணிவரை மின்சாரத் தடை ஏற்பட்டது.

## ராணுவமுகாமைத் தாக்க திட்டமிடப்பட்டதாம்

(கொழும்பு)

மட்டக்களப்பு கோமாரி இராணுவ முகாமைத் தாக்குவதற்கு தீவிரவாத இயக்கம் ஒன்று திட்டமிட்டிருந்ததாகப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன.

களுவாஞ்சிக்குடி, திருமலையிலுள்ள புல்மோட்டை, கிளிநொச்சி ஆகிய பொலிஸ் நிலையங்களைத் தாக்க இவ்வியக்கம் திட்டமிட்டிருந்ததாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன

அண்மையில் மட்டுநகரில்

(6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## "மோசமான அச்சுறுத்தலை நாடு எதிர்நோக்குகிறது!"

### 'அடுத்த சில நாட்கள்' பற்றி அமைச்சர் லலித் எச்சரிக்கை

(கொழும்பு)

"அடுத்த சில நாட்களில் நாடு. மோசமான அச்சுறுத்தல்களை எதிர் நோக்கும் சாத்தியம் இப்பொழுது காணப்படுகிறது" என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி அச்சம் தெரிவித்துள்ளார்

உணுப்பிட்டியில் நேற்றுக் காலை நடைபெற்ற வைபவமொன்றில் அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்படி கவலையைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்; அச்சுறுத்தல் எந்த ரூபத்தில் வந்தாலும் அதனை முறியடிக்க அரசு

[6ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## இனப்பிரச்னையை தீர்க்க ஜனாதிபதி புதிய யோசனை

### பிரதமர் தகவல்

(கொழும்பு)

நாட்டின் இனப் பிரச்னைக்குத் தீர்வுகாணும் புதிய யோசனையை ஜனாதிபதி சர்வகட்சி மகாநாட்டில் வெளியிடுவார் என்று பிரதமர்திரு. ஆர். பிரேமதாசா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

ஜனாதிபதி, பிரதமர், மற்றும் இவர்களுக்குக் கீழ்வரும் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே பிரதமர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

"ஜனாதிபதியின் புதிய யோசனை இனப்பிரச்னைக்கு ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்தக் கூடியதாக விருக்கும்" என்று பிரதமர் கூறினர்,

## மீனம் பாக்கம் சம்பவம்: மற்றுமொருவர் பிணையில் விடுதலை

(சென்னை)

மீனம் பாக்கம் விமான நிலையக் குண்டு வெடிப்பு சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்களில் தம்பிராஜா என்பவர் சென்னை மேல் நீதிமன்ற நீதிபதியினால் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கைதானவர்களில் ஏற்கனவே ஒருவர் பிணையில் விடுதலையானது தெரிந்ததே.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டையில் வீடு கட்டுவதற்கு அல்லது வியாபார ஸ்தாபனம் போடுவதற்கு ஏற்ற 4 பரப்பு காணி றோட்டுக்கரையாக யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், சித்தங்கேணிக்கும் இடையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. யோகலிங்கம், ஸ்கூல் லேன், அளவெட்டி தெற்கு. 874

## தேவை

லேத்மன் [Lathemen] வேலைக்கு உடனடியாக வெற்றிடங்கள் உண்டு. அனுபவமுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். இதற்குமுன் வேலை செய்த அத்தாட்சிப் பத்திரம். சம்பளம் எவ்வளவு எதிர்பார்க்கப்படும் என்றவிபரங்கள் முதல் கடிதத்திலேயே தெரியப்படுத்தவும். எவர்சில்வர் இன்டஸ்றீஸ் லிமிட் யூனிற் 5,6 கைத்தொழில்பேட்டை அச்சுவேலி. 859

## வாடகைக்கு

மானிப்பாய் சந்தையில் பிரதான வீதியில் உள்ள இரண்டு கடைகள் வாடகைக்கு விடப்படும். தொடர்பு: சி சிவலிங்கம் சிவசுந்தரி ஸ்ரோஸ், No. 2, மத்திய சந்தை, மானிப்பாய். 849

## சேவை

குறிக்கப்பட்ட தொகைகளில் புத்தகங்கள் வாங்குபவர்களிற்கு அழகிய நயினை நாகபூசனி அம்மனின் படம் உட்பட பல மூவர்ண படங்கள் இலவசம். அன்புஜீ புத்தக நிலையம், 248/9 கே. கே. எஸ். வீதி, யாழ்நகர். 867

---

## யாழ்ப்பாணம் அக்கடமி
## க. பொ த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985
## மீட்டல் வகுப்புகள்

85ம் ஆண்டு பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் 3-12-84ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

**எம்மிடம் பயின்ற மாணவர்களின் பெறுபேறுகள் எமது பயிற்றும் திறமைக்குச் சான்றாகும்.**

அதிபர்.

தொலைபேசி எண்: 22617.

376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
826

---

## மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கம்
## வெற்றுக் சாக்கு விற்பனை

மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கத்தில் வெற்றுச் சாக்குகள் (4753) விற்பனைக்குண்டு. சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திரத்தை ரூபா200/-முற்பணம் செலுத்திப் பூரணப்படுத்தி 29/11/84 பி.ப. 12-00மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அரக்கு முத்திரையிடப்பட்ட பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர், மானிப்பாய் கோவிற்பற்று ப. நோ.கூ. சங்கம், மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பொதுமுகாமையாளர்.**

25/11/84 871

---

மக்கள் வங்கி வாகனங்கள் விற்பதற்கான

## கேள்விப்பத்திரம்

கீழே குறிக்கப்பட்ட வாகனங்கள் (உழவு இயந்திரம்) விற்பதற்கான சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் மக்கள்வங்கி, யாழ்ப்பாணம் பிரதேச முகாமையாளரால் 14-12-1984 மாலை 4-00 மணி வரை கோரப்படுகின்றன.

பார்வையிட விரும்புவோர் அந்தந்த மக்கள் வங்கிக் கிளை முகாமையாளரின் முன் அனுமதி பெற்றுப் பார்வையிடலாம்.

கேள்விப்பத்திரங்களை மீளப்பெறும் வைப்புப்பணமாக ரூபா 250/ஐ வங்கி அலுவல் நேரங்களில் கிளை முகாமையாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.

சித்திபெறும் கேள்விப்பத்திரகாரர் ஒரு கிழமை தவணைக்குள் முழு விற்பனைப் பணத்தையும் செலுத்தி வங்கி வளவிலிருந்து வாகனத்தை அகற்றுதல் வேண்டும். தவறின் வைப்புப் பணம் ரூபா 250/-ஐ இழக்க நேரிடும்.

இக்கேள்விப்பத்திரம் சம்பந்தமான எந்த முடிவும் பிரதேச முகாமையாளருக்கே உரித்தாகும்.

போட் உழவு இயந்திரம் இல. 36 ஸ்ரீ 6009
— பரந்தன் கிளை

போட் உழவு இயந்திரம் இல. 36 ஸ்ரீ 5047
— முல்லைத்தீவுக் கிளை

பிரதேச முகாமையாளர்.

**மக்கள் வங்கி,**
பிரதேச தலைமை அலுவலகம், யாழ்ப்பாணம்.
(757)

---

## வெளிநாடு செல்வதற்கு

* விமான டிக்கட்:

விசேட கட்டணத்தில் லண்டன், பரீஸ், சிங்கப்பூர், மலேசியா

SPECIAL FARE TO LONDON, PARIS, SINGAPORE AND MALAYSIA

Attractive fares to European Countries U. S. A., Canada and Australia.

* அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை

வார நாட்களில் காலை 8.30 முதல் 4.30 வரையும், சனிக்கிழமைகளில் காலை 9-00 முதல் நண்பகல் 12-00 வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30 ON WEEK DAYS AND ON SATURDAYS BETWEEN 9-00 A.M. — 12-00 NOON

* விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும்

இன்றே நாடுங்கள்

## மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92 போன்: 24154

---

## ஓராண்டு நினைவஞ்சலி
## தீயோ பத்தினாதர் J.P.

(முன்னாள் காங்கேசன்துறை வாடி வீட்டு அதிபரும், யாழ். வாடி வீட்டு அதிபரும்)

மலர்வு:
17-03-1926

உதிர்வு:
27-11-1983



எங்கள் குடும்ப ஒளி விளக்காய் இதயகீதமாய் திகழ்ந்து எங்களை எல்லாம் ஏங்க வைத்த தெய்வமே! உங்கள் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உடன் பிறப்புக்கள் அனைவரையும் ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றுவிட்டீர்களே! உங்கள் நினைவுநாளில ஆத்ம சாந்திக்காக நாளைக் காலை 6-30 மணிக்கு நாவாந்துறை புனித பரலோகமாதா தேவாலயத்திலும், அருள் ஆச்சிரமத்திலும் துக்கப்பாடல் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

அவர் பிரிவால் கலங்கும்
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்**

''பவுணகம்'',
நாவாந்துறை 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 876

---

# ரஜனி

எமது சக்திக்கு அப்பாற்பட்ட சில காரணங்களால் இம்மாத இதழ் வெளிவருவதில் தாமதமாகிவிட்டது.

செங்கை ஆழியானின்
'ஓ... அந்த அழகிய பழைய உலகம்!'
மிக விரை வில் வெளிவரும்.

ரஜனி பப்ளிகேசன்ஸ்,
223, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

---

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை உப அலுவலகம்

கிளிநொச்சி.

1984-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1?-ந் திகதி புதன்கிழமை காலை 10-00 மணி வரை யாழ் அபிவிருத்திச் சபை, பிரதி செயலாளர் அவர்களால் ''கிளிநொச்சி புதிய சந்தைக்கு, றெட்றிக்கோ மைதானத்திற்கு அருகில், வாழைக்குலைச் சந்தையூடாக போடப்படும் வீதியோரத்தில் வரிசையாக 26 கடைகள் இரண்டு கட்டமாக அமைப்பதற்கு, அரசாங்கத் திணைக்களங்கள், அபிவிருத்திச் சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் ரூபா 100,000-க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் ஆகியோரிடமிருந்து அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் இணைப்பிரதிகளில் **''பிரதிச் செயலாளர், (நிதி, சட்டம் வேலைகள்), யாழ். அபிவிருத்திச் சபை, த. பெ. எண் 19, யாழ்ப்பாணம்''** என்று விலாசமிட்டு 12-12-84ந் திகதி காலை 10-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படவேண்டும். அன்றைய தினம் காலை 10-15 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ, அல்லது அவர்களின் பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்களை யாழ். அபிவிருத்திச் சபை, கிளிநொச்சி உப அலுவலகத்தில் 05-12-84-ந் திகதி பிற்பகல் 3-00 மணி வரை பத்திரப்பணம் ரூபா 50/-ம் வைப்புப்பணம் ரூபா 500/-ம் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை கிளிநொச்சி உப அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**ந. பாலசுப்பிரமணியம்,**
உள்ளூராட்சி சேவை, நிர்வாகசேவை.
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
யாழ். அபிவிருத்திச் சபை உப அலுவலகம்,
கிளிநொச்சி.

(863)

---

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்
கதிரன் இளையதம்பி, மந்துவில், கொடிகாமம்.
வாதி

இல. ஈடு/5854

எதிராக
சின்னத்தம்பி, இராசதுரை,
மந்துவில், கொடிகாமம்.
பிரதிவாதிகள்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தால் 5854-ம் இலக்க வழக்கில் எனக்குக் கொடுக்கப்பட்ட அகிகாரத்தின்படி பின்னால் ஆதன இடாப்பில் விபரிக்கப்படும் ஆதனம் 1984-ம் ஆண்டு மார்கழி மாதம் 12-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-30 மணியளவில் அக்காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 5845-99உம் மேலும் ரூபா 3000இற்கும் வருடம் ஒன்றிற்கு நூற்றிற்கு 18 வட்டி வீதம் வழக்கு அணைந்த திகதியாகிய 26-3-78-ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 5-11-80-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரைசட்ட வட்டியான வருடம் ஒன்றிற்கு நூற்றிற்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 1512 கொடுக்கவேண்டும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்ரிக் தென்மராட்சி பகுதி வரணி கோவிற்பற்று மந்துவில் இறை 'காரைக்காடு' நிலப்பரப்பு 16, ⅜ இதிற் தெற்குப் பக்கமாக 8, 3/8எட்டுடன் எட்டில் மூன்று. எல்லை கிழக்கு: சண்முகம் கைம்பெண் நாகிக்குரிய ஆதனம். வடக்கு: கனகசபை பெண் இராசம்மாவிற்குரிய ஆதனம், வேறு ஆதனமும். மேற்கு; றோட்டு. தெற்கு: சின்னத்தம்பி தேவராசாவுக்கும்மறுபேருக்குமுரியவாதனங்கள் இவ்வெல்லைக்குள்ளடங்கிய காணியடங்கலிலும் அதைச்சேர்ந்தவைகள் அனைத்திலும் சொரியலாக அரைவாசியும். பதிவு எண்: 469/93

**சி. த. சுப்பிரமணியம்,**
நீதிமன்ற விற்பனையாளர்,

பெரிய அரசடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
30-11-84 873

### ★ இந்தியத் தேர்தலில் நட்சத்திரங்கள் ★

# அலகபாத் தொகுதியில் அமிதாப்பச்சன், மஹாராஷ்டிராவில் சுனில்தத் போட்டி!

புதுடில்லி, நவ. 26

**இந்தியப் பொதுத் தேர்தலில் இரு பிரபல ஹிந்தி திரைப்பட நட்சத்திரங்கள் போட்டியிடுகின்றன. அமிதாப்பச்சன், சுனில்தத் ஆகியோரே இந்த இருவருமாவர். இவர்கள் இந்திரா காங்கிரஸ் சார்பிலேயே தேர்தல் களத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர்.**

திரு அமிதாப்பச்சன் அலகபாத் தொகுதியில் போட்டியிடுகிறார். திரு. சுனில்தத் மஹாராஷ்டிராவில் போட்டியிடுகிறார்.

அலகபாத்தில் அமிதாப்பச்சன் தோற்கடிக்கமுடியாத ஒரு வேட்பாளராக இருப்பார் என்று அரசியல் வட்டாரங்கள் விமர்சித்தன. சுனில்தத்தின் செல்வாக்கும் கணிசமான அளவில் காணப்படும் என்றும் கூறப்பட்டது.

பிரபல ஹிந்தி நட்சத்திரம் அமிதாப்பச்சன் மறைந்த இந்தியத் தலைவி திருமதி இந்திரா காந்தியின் மிக நெருங்கிய ஆதரவாளராவார். திருமதி காந்தி இவர்மீது தமது புதல்வர்களுக்குச் சமமான அன்பு செலுத்தினர்.

கடந்த ஆண்டு திரு. பச்சன் விபத்தொன்றில் சிக்கி பம்பாய் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுவந்தபோது திருமதி இந்திரா காந்தி அடிக்கடி அவரைச் சென்று பார்த்துவந்தார்.

அமிதாப்பச்சன் தற்போதைய பிரதமர் திரு. ரஜீவ் காந்தியின் நெருங்கிய நண்பரும் பாடசாலை சகாவுமாவார்.

''சொந்தலாபம் கருதி நான் அரசியலில் இறங்கவில்லை. திருமதி இந்திரா காந்தியின் மரணத்தைத் தொடர்ந்து அரசியலில் இறங்க முடிவுசெய்தேன்'' என்று அமிதாப்பச்சன் கூறினர்.

அமிதாப்பச்சன் போட்டியிடும் அலகபாத் தொகுதி நேரு குடும்பத்தவரின் பிறப்பிடமாகும் இங்கேயே திருமதி காந்தி பிறந்த 'ஆனந்தபவான்' இல்லம் காணப்படுகிறது. (கி)

## இந்திய முன்னுள் துணைப்பிரதமர் சவான் காலமானுர்!

புதுடில்லி, நவ. 26

இந்தியாவின் முதுபெரும் அரசியல்தலைவரும் முன்னுள் உதவிப் பிரதமருமான திரு. வை பி. சவான் நேற்றிரவு காலமானுர். இவரின் மறைவு குறித்து இந்திய ஜனதிபதி, பிரதமர் உட்பட பல அரசியல் தலைவர்கள் ஆழ்ந்த கவலைதெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பமைச்சர், மாநில முதலமைச்சர் ஆகிய பிரதான பதவிகளுடன் இந்தியாவின் துணைப்பிரதமராகவும் சரண் சிங் ஆட்சியில் இவர் கடமையாற்றினுர்.

இந்திரா காந்தியின் மிக நெருங்கிய சகாவாக இவர் விளங்கினுர். பின்னர் கருத்து வேற்றுமைகொண்டு ஜனதா கூட்டரசாங்கத்தில் சரண்சிங் தலைமையிலான ஆட்சியில் துணைப்பிரதமராக இவர்சிறிது காலம் பணிபுரிந்தார்.

மஹாராஷ்டிரா மாநிலத்தைச்சேர்ந்த திரு சவான் முன்னுள் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேருவின் ஆட்சியிலும் 62ம்ஆண்டில் பாதுகாப்பமைச்சராக இருந்தார்.

சுதந்திரப்போராட்டங்களில் மிகுந்த ஈடுபாடுகொண்டவர். 56ம் ஆண்டில் வயதில் மிகக் குறைந்த முதலமைச்சராக மஹாராஷ்டிரத்தில் இவர் தெரிவானுர்.

நேற்றிவு புதுடில்லியில் மருத்துவமனையில் இவர் காலமானுர். சிறுநீரக வியாதியால் இவர் பீடிக்கப்பட்டிருந்தார்

இவரின் மறைவுச் செய்தி எட்டியதும் பிரதமர் ரஜீவ் வைத்தியசாலைக்குச் சென்று பூதவுடலுக்கு அஞ்சலிசெலுத்தினுர்.

தெற்கு மஹாராஷ்டிராவிலுள்ள இவரது சொந்தவூரில் மரணச் சடங்குகள் இடம்பெறும். விசேஷ விமானமொன்று இவரின் பூதவுடலை நேற்று மஹாராஷ்டிராகொண்டுசென்றது. இறக்கும்போது இவருக்கு வயது 71 ஆகும். (கி)

## 'ஒபெக்' எண்ணெய் விநியோகத்தில் பரபரப்பு!

### ஷேக் யமானி தகவல்

ரியாத், நவ 26,

'ஒபெக் ஸ்தாபனத்தின் எண்ணெய் விநியோகம் பரபரப்பான ஒரு கட்டத்தை அடைந்திருப்பதாக இத்தாபனத்தின் முக்கிய பிரமுகரான சவுதிஅரேபிய வெளிநாட்டமைச்சர் இளவரசர் ஷேக்யமானி தெரிவித்தார்.

'ஒபெக்' எண்ணெய்விநியோகத்துக்குப் பெரும்கிராக்கி ஏற்பட்டிருப்பதாகவும், நாளொன்றுக்கு 2 கோடிபீப்பாய் எண்ணெய் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இத் தேவையே ஒருபரபரப்பான ஆபத்து நிலைமையை இத்தாபனத்தில் தோற்றுவித்துள்ளது. இதனுல் உற்பத்தியை மேலும் பெருக்கி விலை அதிகரிப்பை மேற்கொள்ள வேண்டிவரும் எனக்கூறப்பட்டது. மேற்கு நாடுகளில் தோன்றியுள்ள எண்ணெய் தட்டுப்பாடு காரணமாகவே 'ஒபெக்' நாடுகளின் எண்ணெய்விநியோகத்தில் கிராக்கி ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது (கி)

## கனடாவில் குடியேற்றம் கட்டுப்படுத்தப்படும்!

### புதிய அரசாங்கம் முடிவு!!

ஒட்டாவா, நவ 26,

கனடாவின் புதிய கன்சர்வேட்டிவ் அரசாங்கம் இந்நாட்டில் குடியேற்றங்களைக் கட்டுப்படுத்தவுள்ளது.

இந்த ஆண்டு 95 ஆயிரமாகவுள்ள கனடாவில் குடியேறுவோரின்தொகை அடுத்த 1985ம் ஆண்டு முதல் 90 ஆயிரமாகக் குறைக்கப்படும் இத்தகவலை கனேடிய குடியேற்ற அமைச்சர் புளோரு மக்டொனுல்ட் தெரிவித்தார்.

வர்த்தக முதலீட்டு நோக்கங்களுக்காக குடியேறுவோருக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. வர்த்தகமுதலீட்டாளர்களின் குடியேற்றங்களால் கனடாவில் இதுவரை 4,600 பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனராம். (கி)

## சோவியத் ஜனதிபதி அடுத்தாண்டு பாரிஸ் பயணம்!

மாஸ்கோ, நவ26

சோவியத் ஜனதிபதி திரு. கொன்ஸ்ரன்ரின்சேர்நென்கோ அடுத்தாண்டு வெளிநாட்டு விஜயமொன்றைமேற்கொள்ளவுள்ளார். இவ்விஜயம் கடந்த பெப்ரவரியில் சோவியத் அதிபராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் முதல் தடவையாக அவர் மேற்கொள்ளப்படவிருக்கும் ஒன்ருகும் என்று கூறப்பட்டது.

திரு. சேர்நென்கோ இம்முதல் பயணத்தில் பிரான்சுக்கே செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது பிரான்ஸ் அதிபர் திரு மித்தரோனும் இதனைத் தெரிவித்திருக்கிருர்.

கடந்த ஜுன் மாதம் அவா சோவியத் சென்றபோது திரு. சேர்நென்கோவிற்குப் பிரான்சுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆயினும் திரு. சேர்நென்கோ சோவியத் சார்பு கிழக்கு ஐரோப்பிய நாடொன்றுக்கே முதற்பயணத்தை மேற்கொள்வார் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

சோவியத் யூனியன், மேற்கு நாடுகளின் அழைப்புக்களை ஏற்றுக் கொள்ளுமாயினும், பயணங்களை மிக அரிதாகவே அந்நாடுகளுக்கு மேற்கொள்கிறது என்றும் கூறப்பட்டது. (கி)

### தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல்:

# தி. மு. க. தலைமையிலான கூட்டணி விபரங்கள் அறிவிப்பு

(சென்னை)

தமிழ்நாடுலோ சபை, சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிடும் தி மு.க. தலைமையிலான 14 கட்சி கூட்டணியினர் தாம் போட்டியிடும் தொகுதிகளின் விபரங்களை முழுமையாக அறிவித்துள்ளனர்

**லோகசபை**

லோகசபையில் தி. மு. க. 26 தொகுதிகளிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 3 தொகுதிகளிலும், மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட கட்சி 3 தொகுதிகளிலும் ஜனதா 5 தொகுதிகளிலும், முஸ்லிம்லீக் 1 தொகுதியிலும் காமராஜ் காங்கிரஸ் 1 தொகுதியிலும் போட்டியிடுகின்றன.

**சட்டசபை**

சட்டசபையில் தி. மு. க 158 தொகுதிகளிலும், மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 17 தொகுதிகளிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 16 தொகுதிகளிலும், ஜனதா 17 தொகுதிகளிலும், உழவர் உழைப்பாளர் கட்சி 10 தொகுதிகளிலும், காமராஜ் காங்கிரஸ் 7தொகுதிகளிலும், முஸ்லிம்லீக 6தொகுதிகளிலும், பார்வாட் பிளாக் 3 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

பாண்டிச்சேரி லோக்சபா தொகுதியில் தி.மு.க. போட்டியிடுகிறது.

### 'அப்பலோ' டாக்டரை

## எம். ஜி. ஆர் கைகுலுக்கி வரவேற்ருர்

### தேகநிலையில் துரித முன்னேற்றம்

நியுயோர்க், நவ 26

நியுயோர்க் 'புறூக்ளின்' மருத்துவமனையில் தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். சென்னை அப்பலோ மருத்துவமனை டாக்டரான பிரதாப் ரெட்டியை கைகுலுக்கி வரவேற்ருர்.

முதல்வர் அடைந்துள்ள மிக விரைவான தேகநிலை முன்னேற்றத்தை இந்நிகழ்ச்சி வெளிக்காட்டுவதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. எம். ஜி. ஆர். தமது படுக்கையிலிருந்தபடியே வலது கரத்தைநீட்டி டாக்டர் பிரதாப்ரெட்டியின் கைகளைக் குலுக்கிமகிழ்ந்தார்.

முதல்வரைச் சந்தித்த டாக்டர் ரெட்டி அவரது தேகநிலை முன்னேற்றம் குறித்து மிகுந்த திருப்தி அடைவதாகக் குறிப்பிட்டார்.

திரு. எம். ஜி. ஆர். வலது கைப் பகுதியில் கையை உயர்த்தி முகத்தைத் துடைக்கின்ருர். அருகிலிருப்பன பற்றி தற்போது நன்கு விளக்கமாக அவருக்கும் புரிகிறது

சிலவேளைகளில் சக்கர நாற்காலியில் அமரச்செய்து 'புறூக்ளின்' மருத்துவமனையின் உட்புறப் பகுதிகளில் அவர் பொழுது போக்காக நடமாட அனுமதிக்கப்படுகிருர். (கி)

### யாழ். கல்வித்திணைக்களத்தின்

## 3ம் தவணைப் பரீட்சைகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டக் கல்வித் திணைக்களத்தினுல் 6-ம் வகுப்புத் தொடக்கம் 10- ம்வகுப்பு வரை நடாத்தப்பவுள்ள 3-ம் தவணைப் பரீட்சைக்கான வினுப்பத்திரங்கள், அவ்வப்பகுதி இணைப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளது தெரிந்ததே

யாழ் கல்வித் திணைக்களப் பரீட்சைச் சபை வினு பத்திரங்களை நேற்று அனுப்பிவைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தன.

நேற்றுத் திங்கட்கிழமை நடைபெறவிருந்த பரீட்சை டிசம்பர் 3-ம் திகதி நடைபெறவுள்ளது. மற்றும் சகல பரீட்சைகளும் இன்று செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது. (மா)

## கிணற்றில் தவறிவிழுந்து மரணம்

(பண்டத்தரிப்பு)

இரவுநேரத்தில் கிணற்றில் தண்ணீர் அள்ளச்சென்ற 70 வயது மூதாட்டி ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து மரணமானுர். பண்ணுகத்தைச் சேர்ந்த திருமதி சந்தசாமி சின்னம்மா என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

# தமிழ்ப்பகுதிகளில் அண்மைக்கால வன்முறைகள் பற்றி ஒரு கண்ணோட்டம்

## பி. பி. ஸி. நிருபர் ஜோர்ஜ் ஹர்மியின் ஆய்வு

[சாவகச்சேரி தாக்குதலையடுத்து பி. பி. ஸி. வானொலிச் சேவை இலங்கையில், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும் வன்முறைகள் குறித்து ஒரு ஆய்வுக் கண்ணோட்டத்தை ஒலிபரப்பியது. இதனை பி. பி ஸி. நிருபர் திரு. ஜோஜ் ஹர்மி தயாரித்தளித்தார். அதன் தொகுப்பு இங்கு வாசகர்களுக்குத் தரப்படுகின்றது.]

கடந்த சில ஆண்டுகளாக இலங்கையின் வடபகுதியில் அதாவது யாழ்ப்பாணத்தில் வன்முறைச் சம்பவங்கள் பழக்கப்பட்டுவிட்டஒன்றாக நிலவி வருவதை உணர்வீர்கள். அண்மையில் இலங்கை அதிகாரி ஒருவர் இந்த ஈழவிடுதலைப் போராளிகள் நடத்தி வரும் அதிரடிப் போராட்டங்கள் காரணமாக 1977-ம் ஆண்டுக்குப் பிறகு பலியானவர்களை கணக்குப்போட்டுப் பார்த்தால்; பாதுகாப்புப் படையில் அதாவது இராணுவப் படையில் 96 பேரும் 182 தமிழ் பொதுமக்களும், அவற்றுள் 13 அரசியல் வாதிகளும் அடங்குவர் என்பதை சுட்டிக் காட்டியிருக்கிறார்.

பாதுகாப்புப்படை இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 58 ஈழ விடுதலைப் போராளிகள் அதாவது கெரில்லாக்கள் கொல்லப்பட்டார்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் வன்முறை அதிரடிகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டு வருவதை அங்குள்ள நிலைமைகள் அவ்வப்போது காட்டி வந்திருக்கின்றன என்பதையும் இத்தருணத்தில் குறிப்பிடுதல் பொருத்தம். வழக்கமாக முன்னர் ஈழ விடுதலைப் 'புலிகள்' ஆளை நோட்டம்விட்டு கவனித்து பின்தொடர்ந்து சைக்கிளில் வந்து சுட்டுவிட்டு சைக்கிளில் பறந்து போய்விடுவார்கள் ஆனால் இப்போது நிலைமை மாறியிருக்கிறது? அவர்களுடைய யுத்த தந்திரங்களும் மாறியிருக்கின்றன.

திட்டமிட்டு அதிரடிவேலையில் தேர்ச்சிபெற்று பூண்டோடு இலக்குகளைத் தாக்குவதில் தீவிரம்பெற்று வருகிறார்கள் என்பதையே இந்தசம்பவங்கள் நமக்கு புலப்படுத்துகின்றன.

சுயாட்சி வேண்டுமென்ற தமிழர்களின் கோரிக்கைக்கு சிங்கள அரசு மறுத்தசன் விளைவுதான் தனிநாட்டுக் கோரிக்கைப் போராட்டம் வெறும் கோரிக்கையாக இருந்தால் சிங்கள பாதுகாப்புப் படையினர் வட பகுதிக்கும் கிழக்கு மாகாணத்திற்கும் அனுப்பப்பட்டதும் அவர்களின் கடுமையான போக்கும் அடாத்தனமும் பிரிவினை வாதிகளுக்கு தமிழ் மக்களிடையே ஆதரவு திரட்டித் தந்தது என்பதில் ஐயமில்லை.

7 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்ப் பிரிவினை வாதிகள் தொடக்கிய போராட்டத்தில் சாவகச்சேரியில் நடந்த சம்பவத்தில் உயிர் இழந்தவர்களைப் போல் வேறு எங்கும், என்றும் நடந்ததில்லை.

பாதுகாப்புப் படையினரும் அண்மையில் தமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர். நவம்பர் மாதம் 6ம் திகதி முல்லைத்தீவில் உள்ள தமிழ் போராளிகளின் தளம் ஒன்றைத் தாக்கியதில் 7 தமிழ் போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர். சென்ற 18ம் திகதி 3 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். தமிழ் தீவிரவாதிகளைப் பொறுத்தவரை தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளிலிருந்து ஏனைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்தியுள்ளனர்.

கொழும்பில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்திற்குதமிழ் போராளிகள் தான் பொறுப்பு என்பது இன்னும் திட்டவட்டமாக தெரியாத போதிலும் பத்து நாட்களுக்கு முன்னர் நடந்த தொலைக்காட்சி நிலையத் தாக்குதலுக்கு இவர்கள் பொறுப்பு என்பதில் எவ்வித சந்தேகமும் இருப்பதாகத் தெரியவில்லை.

''இராணுவத்தின் வடபிரதேச இரண்டாவது தலைவர் கேர்ணல் ஆரியப்பெருமா தமிழ் கெரில்லாக்கள் வைத்த கண்ணிவெடியில் உயிரிழந்தார் அனைத்துலக அரங்கின் கவனம் இந்தியாமீது இருக்கும் போது கெரில்லாக்கள் இத்தாக்குதலை நடத்துகிறார்கள்'' என்று தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறியுள்ளார்.

நிலைமை இப்படி மோசமாகிக் கொண்டு வருகையில் இருதரப்பினருக்குமிடையே உடன்பாடு ஏற்படவழி ஏதும் உண்டா? என்ற சந்தேகமும், கவலையும் எழுந்துள்ளது.

-தொகுப்பு

**கடம்பகுமாரன்**

## தெ. ப. கூ. சங்க உதவி

(கரவெட்டி)

மண்டான், பொலிகண்டி குண்டு வெடிப்புச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கட்டைவேலி - உடுப்பிட்டி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் நிதி உதவி செய்துள்ளது.

மண்டான் குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து இடம்பெற்ற பாதிப்புக்களுக்குள்ளான இச் சங்கத்தின் அங்கத்தவர் திரு. வ. சி. கிருஷ்ண பிள்ளைக்கு ஆயிரம் ரூபாவையும் பொலிகண்டி கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு 500 ரூபாவையும் சங்கம் வழங்கியுள்ளது.

முன்பு இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டோருக்கும் இச் சங்கம் உதவிகள் வழங்கியுள்ளது.

## பனம் விதைகள் நாட்டப்பட்டன

[வண்ணார்பண்ணை]

நெடுந்தீவில் உள்ள ஐம்பது ஏக்கர் முடிக்குரிய நிலத்தில் பத்தாயிரம் பனம் விதைகள் நாட்டப்பட்டன.

முதல்நாள் சிரமதான வைபவத்தின்போது நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ மகாலிங்கம் பனை அபிவிருத்திச் சபையின் இயக்குநர் திரு. எஸ். பாலசிங்கம், இச் சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். கோகுலதாசன் ஆகியோர் முறையே பனம் விதைகளை நாட்டிச் சிரமதான வைபவத்தை ஆரம்பித்து வைத்தனர்.

நெடுந்தீவில் பனந்தோப்பு ஒன்றை உருவாக்கும் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஐம்பது ஏக்கர் காணியில் இந்த விதைகள் நாட்டப்பட்டன.

## கடைசி பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய பஸ்நிலையத்திலிருந்து நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறைக்கும், காரைநகருக்கும் கடைசி பஸ் புறப்பட்டது.

764, 769 இலக்க பஸ்கள் நண்பகல் ஒரு மணிக்கும் தீவுப்பகுதிக்கு நண்பகல் 12 மணிக்கும் கடைசி பஸ்கள் நேற்று புறப்பட்டுச் சென்றன. (மா)

## ரூ. 2,500 அன்பளிப்பு

[புலோலி]

இங்கிலாந்திலுள்ள சமூக சேவையாளரொருவர் வடமராட்சிப் பகுதியில் அண்மையில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி வழங்குவதற்கென பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திற்கு 2,500 ரூபா பணத்தை அனுப்பி வைத்துள்ளார்.

பருத்தித்துறை லயன்ஸ் கழகத் தலைவரும் சமூகசேவையாளருமான லயன் டாக்டர் எம். கே. முருகானந்தனும் சேவாச்சிரமத்திற்கு 200 ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளார்.

## நேரப் பதிவாளர் கஷ்டம்

(புலோலி)

வட பிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறை பஸ் நிலையத்திலுள்ள நேரப் பதிவாளர் அலுவலகத்தில் மழை வேளைகளில் மழைநீர் கூரையால் உள்ளே கொட்டுவதனால் ஊழியர்கள் கடமைசெய்யமுடியாமல் பலத்த கஷ்டங்களை அனுபவித்துவருகின்றனர்.

பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான மக்கள் சந்தையில் உள்ள இவ்வலுவலகக் கட்டிடத்தை வெகு விரைவில் திருத்திக் கொடுப்பதற்குப் பருத்தித்துறை நகரசபை நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பிரயாணிகள் கோரியுள்ளனர்.

## இளைஞர்கள் விடுதலை

(பண்டத்தரிப்பு)

கொழும்பு குண்டு வெடிப்புச் சம்பந்தமாக அண்மையில் கொழும்பில் வைத்து சந்தேகத்தின் பேரில் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட பண்டத்தரிப்பைச் சேர்ந்த சைமன் ஜெயரத்தினம் என்ற இளைஞர் விடுதலை செய்யப்பட்டார். இவருடன் கைது செய்யப்பட்ட சுழிபுரத்தைச் சேர்ந்த கலைச்செல்வன் ரவீந்திரன் என்ற இளைஞரும் விடுதலை செய்யப்பட்டார்.

வெளிநாடு செல்வதற்கு பாஸ்போட் எடுப்பதற்காக கொழும்பு சென்றபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டு ராஜகிரிய பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு கடுமையாக விசாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## அனுமதிப் பத்திரம் வழங்கமறுப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு யாழ்தேவி ரயிலிலிருந்துநேற்றுமுன்தினம்பிற்பகல்வந்து சேர்ந்த பிரயாணிகளைஏற்றிச் செல்வதற்குயாழ். புகையிர நிலையத்துக்குச் சென்ற வ. பி. போ. வ. சபை பஸ்களுக்கு யாழ். பொலிஸார் அனுமதிப் பத்திரம் வழங்க மறுத்து விட்டதாகத் தெரியவந்துள்ளது.

பொலிஸ் அனுமதிப்பத்திரம் வழங்கப்படாத நிலையிலும் கூட 5 பஸ்கள் யாழ். புகையிரத நிலையத்துக்குச் சென்று பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு அவர்களின் பஸ்தரிப்பிடங்களில் விட்டு பஸ் டிப்போக்களைச் சேர்ந்தன. (மா)

# பூநகரியில் மற்றுமொரு ராணுவ முகாம்!

(முழங்காவில்)

அண்மையில் கிளிநொச்சி மாவட்டம் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் இப்பகுதியில் மேலும் ஒரு இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ முகாம் பூநகரி — மன்னார் வீதியில் 4-ம் கட்டையடியில் ஏற்கனவே பொலிஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பூநகரி வாடியடியில் ஒரு முகாம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஊரடங்கு 2 மணிக்கு அமுல்

## தமிழ் மாவட்டங்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் 2 மணிக்கு அமுல் செய்யப்படுமானால் இப்பகுதி மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்.

யாழ் பிரஜைகள் குழுவினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், நோயாளிகள் யாவரும் இதனால் பெரும் பாதிப்படைவார்களெனவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஊரடங்கு தேவையென அரசு கருதினால், நேரத்தை இரவு 6 மணி முதல் காலை 6 மணிவரை மன்னார், வவனியாவில் இருப்பது போல் மாற்றலாம் என்றும், கூடிய விரைவில் இதனை முற்றாக நீக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (க)

# இன்றைய பலன்

மாதம்—கார்த்திகை
திகதி—12(27-11-1984)
வாரம்—செவ்வாய்
திதி—பஞ்சமி பின் இரவு 1-32வரை
நக்ஷத்திரம்—உத்தராடம் முன் இரவு 9-55

மேடம்;- சகல துறைகளிலும் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும் வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக ஆதாயமுண்டு மாணவர்களுக்கும் கல்வியில் முன்னேற்றமுண்டு.

இடபம்:- மக்களால் மகிழ்ச்சி மனம் நிறைந்த வாழ்வு புதுமையில் நாட்டம் புதுப்பொலிவும் உண்டு.

மிதுனம்:- விவசாயத்துறை கவலையைத்தரும் மனதில் உற்சாகம் குன்றும் கால்நடைகள் விடயத்தில் கவனமாக இருக்கவும்.

கடகம்:- குடும்பத்தில் மகிழ்ச்சி செலவினங்கள் கட்டுப் படியாகவே இருக்கும்.

சிங்கம்:- பேச்சு வார்த்தையில் உணர்ச்சி வசப்படாதிருப்பது நன்று அவசர முடிவின் மூலம் விரோதத்தை தேடிக் கொள்வீர்கள்.

கன்னி;- இறை வழிபாடு மேலிடும் இதன் மூலம் இதயத்தில் அமைதியும் ஏற்படும் முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு ஆதரவு தருவார்.

துலாம்:- தொழில் துறையில் வெற்றி காணப்படும் விருந்தினர் வருகையால் இல்லத்தில் இனிமை தவழும்.

விருச்சிகம்;- புதிய தொழில் துறையால் வருவாய் பெருகும் முயற்சியால் உயர்வுக்கும் இடமுண்டு.

தனுசு:- பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும் உதவி செய்யபோய் உபத்திரவத்தில்மாட்டிக்கொள்வீர்கள்.

மகரம்;- வாய்வுக் கோளாறுக்கு இடமிருப்பதால் உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

கும்பம்:- இன்று அருளும் பொருளும் இணைந்து கிடைக்கும் தொழில் புரியும் இடத்தில் பாராட்டப் படுவீர்கள்

மீனம்:- எதிலும்விரத்தி மனப்பான்மை தென்படும் எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் விளையும் சகோதர வழி சுகாதாரம் வேண்டும்.

**திருமலை வே. ரவீந்திரன்**

## ஓய்வு பெற்றார்

(புலோலி)

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றப்பதிவாளர் திரு. றிச்சேட் ஜெயராசசிங்கம் 34 வருட அரசாங்கசேவையின் பின்னர் ஓய்வுபெற்றுள்ளார்.

இவர் 1950ம் ஆண்டு தொடக்கம் 1960ம் ஆண்டு வரையும் இலங்கை பொலிஸ் திணைக்களத்திலும், 1960ம் ஆண்டு தொடக்கம் 1984ம் ஆண்டுவரை பருத்தித்துறை அனுராதபுரம், மன்னார், கிளிநொச்சி நீதிமன்றங்களிலும் கடமையாற்றியுள்ளார்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் பதிவாளராகக் கடமையாற்றி பதவி உயர்வு பெற்று, மட்டக்களப்புக்குச்சென்று தற்போது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றபிரதிப் பதிவாளராகக் கடமையாற்றும் திரு எஸ். நடராசா பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றப்பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## விசாரணையின் பின் விடுதலை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் ஊரடங்குச் சட்ட நேரத்தில் வீதிகளில் பல்வேறு இடங்களில் கைதான 17 பேர் விசாரணையின்பின் நேற்றுமுன் தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

விஸ்வமடு, செம்மலை, புதுக்குடியிருப்புப் பகுதிகளில் ஊரடங்குச்சட்ட நேரத்தில் ஆயுதப்படையினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் விசாரணையின் பின் விடுதலைசெய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. முல்லைத்தீவுப் பகுதியில் ஊரடங்கு தீவிரமாக அமுல்நடத்தப்படுகிறது.

## விசேட ஒழுங்குகள்

(மாவிட்டபுரம்)

வீடமைப்புக்கடன் பெற்றவர்கள் அதனை இலகுவான முறையில் திருப்பிச்செலுத்துவதற்கு தேசிய வீடமைப்பு இலாகாவினர் விசேட ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

ஏற்கனவே வீடமைப்புக் கடன் பெற்றவர்கள் அதனை தவணைமுறையில் தற்போது செலுத்திவருகின்றனர். ஆனாலும் இப்பாது போககுவரத்து மற்றும் வசதிகள் குறைவாகவிருப்பதால் அவற்றை உரிய திகதிகளில் செலுத்தாது விடுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதையடுத்தே தேசிய வீடமைப்பு இலாகாவினர் மேற்படி விசேட ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

ராணி (யாழ்ப்பாணம்
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
(வயது வந்தவர்களுக்கு)

ஹரன் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30,
சிவாஜி-கே.ஆர்.விஜயா
தங்கை

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதேவி,
தாயில்லாமல்
நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
சிவாஜி - லக்ஷ்மி
ராஜராஜசோழன்
(கலர்)

ரீகல் [யாழ் நகர்]
10-30, 2 15,
Kirk Douglas. . . .
Anthony Quinn......
Silvana Mangana.....
ULYSSES
(Techni color)

சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-30,
Brooke Shields
Christopher Atkins
"THE BLUE LAGOON"
கப்பல் விபத்தில் தப்பி ஒரு தீவில் கரைசேர்ந்து வளர்ந்த இரு சிறுர்களின் காதல் காவியம்.
கண்டிப்பாக வயதுவந்தவர்கட்கு மட்டும்.

லிடோ சினிமா
தினசரி 10 30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-15, P. M.
SPIDER MAN STRIKES BACK
(color-karaty-action)

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30,
2வது கொட்டகை நிரம்பிய வாரமாக யாழ் நகரில் என்றுமே இல்லாதளவு மாதர்கள் பெருந்திரளாக பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கும் ஓர் திரைப்படம் தான்
K. பாலச்சந்தரின்
பூவிலங்கு
[கலர்].
ஏமாற்றமடையாமல் இன்றே பார்த்துமகிழுங்கள்

வின்ஸர் (யாழ்)
10-30, 2-30,
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
மூர்த்தி-Y. G. மகேந்திரன்
சிவப்பு சூரியன்
(ஈஸ்ட்மன் கலர்)
முற்றிலும் மாறுபட்ட பாணியில் உருக்கமுடன் நடித்து சகோதரபாசத்தை எடுத்துக்காட்டும் ஒப்பற்ற காவியம்!

### அநுராதபுரத்தில் கைதான

# 7 தமிழ் ஊழியர்கள் தடுப்புக் காவலில்! பிரதம பொறியியலாளரைக் காணவில்லை !!

[யாழ்ப்பாணம்]

அநுராதபுரத்தில் கைதான ஏழு தமிழ் அரசாங்க ஊழியர்கள், தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார்கள். அநுராதபுரம் பொலிஸ் அதிகாரி திரு ஏ இ. பெரேரா இவ் விசாரணையை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அநுராதபுரம் மின்சாரப் பொறியியலாளர் விடுதி ஒன்றை ஆயுதப்படையினர் முற்றுகையிட்டபோது நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த இருபொறியியலாளர்களான பொன்னம்பலம், பரஞ்சோதி ஆகியோர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மீசாலையைச் சேர்ந்தபொறியியலாளர் பொன்னம்பலம் ஆஸ்பத்திரியில் மரணமானுர். இச் சம்பவத்தைத்தொடர்ந்து அங்கு கடமையாற்றிய தமிழ் உத்தியோகத்தினர்கள் அச்சமடைந்து பாதுகாப்புத்தேடி அனுராதபுரம் பொலிஸ் நிலையம் சென்றபோது சந்தேகத்தின் பேரில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது

தற்போது தடுத்து வைக்கப்பட்டிருப்போர் வேலுப்பிள்ளை [மின்சாரப்பொறியியலாளர்], மகேசன் [உதவிக் கணக்காளர்], பாஸ்கரன் [நிர்வாக உதவியாளர்], தாமோதரம் [கணக்காளர்], மயில்வாகன் [பதில் களஞ்சியப் பொறுப்பாளர்], இரத்தினசபாபதி (மின்சார அத்தியட்சகர்], பாலசிங்கம் [பிரதம லிகிதர் ஆகியோராம்.

பிரதம பொறியியலாளர் கந்தசாமியை இதுவரை காணவில்லையென்றும், உறவினர் தேடி வருவதாகவும் கூறப்படுகிறது. தடுத்து வைக்கப்பட்டுள்ள 7 பேரையும் விடுதலை செய்யுமாறு உறவினர்கள் மேலிடத்துடன் தொடர்பு கொண்டு கோரியுள்ளதாக தெரியவருகிறது. [க]

## ராணுவம் சோதனை

(வவனியா)

சாவகச்சேரிச் சம்பவத்தின் பின் வவனியா நகரம் நேர காலத்துடன் உறங்கி விடுகின்றது.

அதேவேளை வவனியா நகரில் அடிக்கடி இராணுவத்தினரால் தேசிய அடையாள அட்டைகள் சோதனை நடைபெறுவதும், நகரம் நேரத்துடன் உறங்குவதற்கு ஒரு காரணமாகும்.

கடந்த 23-ம் திகதி வவனியா நகர் சுற்றிவளைக்கப்பட்டு, வாகனப் போக்குவரத்தினை நிறுத்திய இராணுவத்தினர் அடையாள அட்டைச் சோதனையை மேற்கொண்டனர்.

சோதனை நடைபெற்று முடியும்வரை நகருக்குள் இருந்த மக்கள் வெளியே போகவோ, வெளியார் நகருக்குள் வரவோ அனுமதிக்கப்படவில்லை. மிகவும் கடும் சோதனை இடம் பெற்றது.

## தங்கப்பாளங்கள் கடத்த முயன்றவர்கள் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து 850 பவுண் கொண்ட 10 தங்கப்பாளங்களைத் திருச்சிக்குக் கடத்தவிருந்த இரண்டுபேரைச் சுங்கப்பகுதியினர் கண்டுபிடித்துள்ளனர்.

ஒருவர் 500 பவுண் எடையுள்ள 6 தங்கப்பாளங்களையும், மற்றவர் 350 பவுண் எடையுள்ள நான்கு தங்கப்பாளங்களையும் தங்கள் உடலில் வைத்துத் திருச்சிக்குக் கடத்த முயற்சித்தனர்,

சுங்கப் பகுதியினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து இவர்கள்சோதனையிட்டபோது கடத்தற் பொருட்கள் சிக்கின.

கடத்தலுக்குச் சூத்திரதாரியாகவிருந்த நபரும் பிடிபட்டுள்ளார். இவருக்கு 10 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மற்றைய இருவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டது தங்கப்பாளங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. [சூ]

## ஊமைகளாக நடித்து திருடும் பலே ஆசாமிகள்!

(மாவிட்டபுரம்)

ஊமைகளாக நடித்துப் பிச்சை வாங்க வருபவர்கள் சந்தர்ப்பம் பார்த்து வீட்டிலுள்ள பொருட்களைத் திருடிக்கொண்டு போய் விடுகிறார்களாம்.

வசாவிளான் பகுதியில் இப்படியான கைங்கரியத்தில் ஈடுபடும் மூன்று ஆசாமிகள் குறித்துக் குட்டு வெளிப்பட்டுள்ளதால், பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

வசாவிளான் பகுதியில் நடமாடிவந்த மேற்படி 3 ஆசாமிகளும் தாம் ஊமைகள் என்று நடித்துப் பிச்சை வாங்கி வந்தனராம். வசாவிளான் வன்னியர் வளவு என்னுமிடத்தில் வீடொன்றுக்குச் சென்ற இவர்கள் குடிக்கத் தண்ணீர் கேட்டுவிட்டு அங்கு நின்ற சிறுமியின் தங்கச் சங்கிலியை அபகரித்துக்கொண்டு தலைமறைவாகி விட்டார்களாம். மேலும் சில வீடுகளில் இவர்கள் தமது கைங்கரியத்தை நடத்தியுள்ளனராம்.

தற்போது இவர்களை இனம் கண்டுகொள்ளப் பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்கிறார்களாம்.

இதுபற்றித் தீவிரவாத இயக்கத்தினரும் அறிந்து, இம் மூன்று ஆசாமிகள் குறித்து விசாரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

### பிரிகேடியர் ஆரியப்பெருமா

# இலங்கை இராணுவத்தில் கொல்லப்பட்ட 35 வது வீரர்!

(கொழும்பு)

தெல்லிப்பளை கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்த பிரிகேடியர் ஆரியப்பெருமா தீவிரவாதிகளினுல் கொல்லப்பட்ட 35-வது இலங்கைஇராணுவவீரர் என்று இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

பலாலி இராணுவமுகாம் பொறுப்பதிகாரியாக கேர்ணல் தரத்தில் ஆரியப்பெருமா கடமையாற்றினுர். தெல்லிப்பளையில் பலியானதைத் தொடர்ந்து பிரிகேடியராக அவர் பதவி உயர்த்தப்பட்டார்.

தெல்லிப்பளை கண்ணிவெடித்தாக்குதலின் போது கேர்ணல் ஆரியப்பெருமா செயற்பட்ட விதம்பற்றி இராணுவ தலைமையகம் தெரிவித்திருப்பதாவது; சம்பவதினம் கண்ணிவெடி வெடிததும்த் கேர்ணல் ஆரியப்பெருமாவின் இராணுவ ஜீப்வண்டி சுமார் 10 அடி உயரம் வரை நிலத்திலிருந்து தூக்கிஎறியப்பட்டது.

''இத்தாக்குதலில் ஆரியப்பெருமாவின் உடலின் மேல் பாகம் படுகாயமடைந்த நிலையில் காணப்பட்டார். அவர் உடனடியாக தம்முடன் அப்போது இருந்தவர்களை பதிலடிக்குத் தயார்படுத்தி ஒழுங்கு செய்தார் கூடவே காயமடைந்த தமது ஜீப்சாரதியையும் வேறுஇரு வீரர்களையும் முகாம் கொண்டு செல்ல உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்தே அவர் பலாலி முகாமுக்கு ஸ்தலத்திலிருந்து வானொலி அறிவிப்பு மூலமாக இத்தாக்குதல் பற்றித் தெரிவித்து மேலதிக இராணுவ அணிகளை அங்கு அழைத்தார் இதன் பின்னர் சில நிமிடங்களில் அதிகளவு இரத்தப்போக்குக் காரணமாக அவர் உயிரிழந்தார்''. (கி)

### சாவகச்சேரி தாக்குதல் எதிரொலி

# எட்டு வீடுகள் சேதம்; பொருட்களும் சூறை

[சாவகச்சேரி]

சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, சுற்றுடலில் வசித்தமக்கள் பாதுகாப்புத் தேடி பிற இடங்களில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்துக்கு முன்னுலும், அருகிலும், பின்னுலும் உள்ள வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளன. அவ்வீடுகளில் காணப்பட்ட பல பெறுமதிமிக்க பொருட்களைச் சூறையாடப்பட்டுள்ளதுடன் அங்கு காணப்பட்ட ரீவிக்கள், குளிர் சாதனப்பெட்டிகள் சேதப்படுத்தப்பட்டுள்ளனவாம்.

பூட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட வீடுகளின்கதவுகளையும் கிறில்களையும் உடைத்து உட்புகுந்தவர்கள் சாறிகள், வெளிநாட்டுப் பொருட்கள், மணிக்கூடுகள், றேடியோக்கள் போன்றவற்றையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இவ்வாறுன சம்பவங்கள், பொலிஸ் நிலைய வளவினை அண்மித்துள்ள எட்டு வீடுகளில் இடம்பெற்றுள்ளன எனத் தெரியவந்துள்ளது

சாவகச்சேரிக்கு விஜயம் செய்த யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் இவ் வீட்டுச் சொந்தக்காரர்கள் சேதங்கள் பற்றி நேரில் முறைப்பாடு தெரிவித்தனர் எனவும் யாழ். அரச அதிபர் அவ் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு ஆறுதல் கூறினுர் எனவும் தெரிய வந்துள்ளது.

அத்துடன் இவ் வெட்டுவீடுகளில் இரண்டு வீடுகளின் கூரைகள் எரிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

## ரூபவாஹினி

### இவ்வாரத் தமிழ் நிகழ்ச்சிகள்

செவ்வாய்
மாலை
6-30 'காத்திருப்பேன் உனக்காக' உள்ளூர்த் திரைப்படம் பாகம்-3

புதன்
மாலை
6-00 'மலரும் அரும்புகள்' சிறுவர் நிகழ்ச்சி

வெள்ளி
6 00 விளையாட்டுப்பயிற்சி

### இன்று

மாலை
5-30 'ரோய் பொக்ஸ்' சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-00 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
6-30 'காத்திருப்பேன் உனக்காக' திரைப்படம் (தமிழ்) பாகம்-3
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இளைஞர் விவகாரம் (சிங்களம்)
7-45 ஆங்கில இசைநிகழ்ச்சி 'பெஸ்ட் ஒவ்த மிட்நைட் அன்ட் ஸ்பெஷல்
8-15 செய்திகள் [சிங்களம்]
8-35 ஆங்கில இசைத் தொடர்ச்சி
9-00 'டிபரன்ற்ஸ்டிரோக்ஸ்' நகைச்சுவை சித்திரம் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
10-00 துப்பறியும் சித்திரம் [ஆங்கிலம்]
10-30 உலகச் செய்திகள்
10-35 துப்பறியும் சித்திரம் தொடர்ச்சி
11-35 நிகழ்ச்சிகள் முடிவு

தரமான
வீடியோ
படப்பிடிப்பிற்கு
சித்ராலயா

உ
சேர். பொன். இராமநாதன் அவர்களுடைய
குருபூசை விழா
நவம்பர் மாதம் 28 ம் நாள் புதன்கிழமை
இராமநாதன் கல்லூரியிற் கொண்டாடப்படும்.
முற்பகல் 8 00 மணிக்குச் சமாதி ஆலயத்தில்
அபிடேகமும் திருவிழாவும்
அதனைத் தொடர்ந்து அன்னுர் பற்றிய
கவியரங்கும் நடைபெறும்.
தனிப்பட்ட அழைப்பு அனுப்ப இயலாமையினுல் பெற்ருேர், பழைய ஆசிரியர், மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் இவ்வழைப்பை ஏற்று வழமைபோல் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேம்.
அதிபர், ஆசிரியர், மாணவர்,
இராமநாதன் கல்லூரி.
(879)

### மணி வாக்கு

மகிழ்ச்சியாக வாழ்வது நமது லட்சியமானல் அதை அடைவது எளிது. ஆனல் நாமோ மற்றவர்களைக் காட்டிலும் அதிக மகிழ்ச்சியோடு இருக்க ஆசைப்படுகிறோம். அது முடியாது; ஏனென்றால் நாம் நினைக்கும அளவிற்கு உண்மையில் அவர்களடம் மகிழ்ச்சி கிடையாது.

— மொன்டிஸ்கியூ.

# நமதுநோக்கு

## நாட்டுக்கு உதவும் நல்லுரை

பயங்கரவாதிகளின் சூழ்ச்சிக்குப் பலியாகாமல் மக்கள் அமைதி பேண வேண்டுமென்ற பாதுகாப்பு அமைச்சரின் வேண்டுகோள் எதனைக் குறிக்கிறது?

நாட்டில் நடைபெறும் குழப்பம் ஓர் போர்மயமானதல்லவா? மக்களின் சிவில் வாழ்க்கையின் மத்தியில் கடும்போர், காலத்துக்குக்காலம் நடைபெறுகின்றது.

இப்போரில் பலியாகின்ற பொதுமக்கள் தமிழர்களே என்று நினைத்தால் அமைச்சரின் வேண்டுகோள் சிங்கள மக்களுக்கு விடுக்கப்பட்டதெனக் கொள்ளவேண்டும்.

வடபகுதிக்கு வெளியே-ஏன் கிழக்குக்கும் வெளியே வாழும் தமிழ் மக்களைப் பாதுகாக்க அரசாங்கம் இயன்றதெல்லாம் செய்யும்.

இப்பகுதியில் நடைபெறும் பிரமாண்டமான அழிவுக்கு ஈடுகொடுப்பது இங்கு வாழும் ஏழைத் தமிழ் மக்கள் என்ற எண்ணம் நிலைத்திருக்கமுடியாது; ஆனல் இதுகாறும் நடந்த நாடகம் அதுவே, நாட்டின் ஒற்றை ஆட்சிக்கு பங்கம் இருக்கமுடியாதென்று சங்கற்பம்செய்பவர்கள், தமிழரை என்றும் அழிக்கமுடியாதென்பதையும் நம்பவேண்டும்.

பாதுகாப்பு அமைச்சர் தம்முடைய பொறுப்பைக் கௌரவமாக நிறைவேற்ற ஒற்றைப்பாதையில் போவதுபோல் தெரிகிறது.

இப் பகுதியில் மூளும் போருக்கு இங்கேயே முடிவு கட்டவேண்டுமென்பதே அந்த முடிவு. கடந்த அனுபவத்தைச்கொண்டு கருத்து வழங்குவதானல்; பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் பொதுமக்கள் இப்பகுதியில் எங்கு வாழ்ந்தாலும், அவர்களைக் கொல்லுதல், உடைமையை அழித்தல், அபகரித்தல் போன்ற அட்டூழியங்களை இப்பகுதி காணும் பயங்கரக் காட்சிகள்.

இவற்றைப் பார்த்துக்கொண்டு இங்கு மக்கள் அமைதியாக வாழலாமென்று அமைச்சர் நினைக்கமாட்டார். எனவே 'போர்' நிகழும் இடம் இதுவானல் பேரழிவை நாம் எதிர்பார்க்கவேண்டியது சொல்லாமலே விளங்கும்.

உண்மையில் இந்த நாட்டில், பிறந்து வளர்ந்து, ஒரு பழம் பெரும் சமூகமென்று கருதப்படும் தமிழ் மக்கள் இந்தக் கதிக்கு ஆளாவதை அரசு அனுமதிக்குமா? மக்கள் அனுமதிப்பார்களா?

விடயத்தை பூசிமெழுகாது; தெளிவாகவும் திடமாகவும் அணுகுவதானல், தமிழ்ப்பகுதிகளில் இடம் பெறும் தாக்குதல்கள் எல்லாம் தமிழர் பிரச்னையின் 'குண்டுவெடிப்புக்கள்'

பிரச்னையை வளரவிட்டதால் ஏற்பட்ட அபாயத்தை இரு பகுதியினரும் ஆழமாக உணர்வது மிக அவசரமானது.

அரசாங்கம் ஒத்துக் கொள்ளுமளவிற்கு இந்தியா இதில் ஒரு பெரும் பங்கு கொண்டிருக்கிறது.

அங்கு—தமிழகத்தில் தமிழ் தீவிரவாதிகளின் முகாம் எதுவுமில்லை என்ற பழைய பதிலே இலங்கைப் பிரதமரின் கூற்றுக்குவிடையென்பதை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும்.

இந்திராவின் தலைமையில் இருந்த இந்தியா, தொடர்ந்தும் அத்தகைய ஆழ்ந்த பொறுப்புடைய அரசியல் ஞானத்தால் ஒரு தீர்க்கமான முடிவுக்கு உதவுமோ என்பது இன்று சந்தேகத்துக்குள்ளாகின்றது.

அமரர் இந்திரா காந்தி தமிழ் மக்களின் துர்க்கதியை நன்குணர்ந்தவராயினும் இலங்கையின் சுயாதினத்துக்கு எவ்வித பங்கமும் ஏற்படாது காப்பதில் கண்ணும் கருத்துமாகவிருந்தார்.

இந்தப் பேருண்மையை நன்கறியாத அரசியல் பேதைகள், அவர்களின் ஆழமறியாத பத்திரிகைப் பிரசாரங்கள் வெகு விரைவில் இதனை உணரமுடியும்.

தமிழகத்தின் உணர்வு எவ்வாறு விறுவிறுப்பாயிருந்த போதும், முன்னை நாள் முதல் அமைச்சர் எம் ஜி ஆர். இடைக்கிடை 'ஊசிமருந்து' போட்ட போதும் இந்திராவின் மந்திரத்துக்கு கட்டுப்பட்டவர்.

இந்த அரசியல் போக்கை நன்ருக உணர்ந்த ஜனதிபதி ஜெயவர்த்தன இன்றைய நிலைக்கு ஒரு சடுதியான முடிவுகாண இந்தியத் தலைவர்களுடன் கூடி ஆலோசித்தல் அவசியம்.

பயங்கரவாதத்தை ஒழிக்க இங்குள்ள மக்களின் பித்தம் தெளிய அங்குதன் மருந்துண்டு. நாம் சரணடைவதல்ல அதன் கருத்து. சீன, அமெரிக்கா போன்ற வல்லரசுகளை நம்பி மோசம் போகாமல் தமிழ் நாட்டை வசப்படுத்த புதுடில்லியில் வசதியுண்டு.

## ஜீப்கடத்தப்பட்டது!

(சாகச்சேரி)

சாவகச்சேரி முன்னள் எம். பி. திரு. வீ. என். நவரத்தினத்தின் ஜீப் இனந்தெரியாத வாலிபர்களால் கடத்திச் செல்லப்பட்டது.

சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள ஒரு வீட்டில் இவ்வண்டி வைக்கப்பட்டிருந்தபோதே கடத்திச்செல்லப் பட்டதாம்.

## சம்பள உயர்வு பாரீர்

[கொழும்பு]

பிரதமர், அமைச்சர்கள், எம். பிக்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் தற்போதைய [ஒரு வருட] சம்பளம் ரூ. 21,000, இது ரூ 96.000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களுக்கு தற்போதைய சம்பளம் ரூ 21,000, இனிமேல் ரூ. 70,200. எம். பிக்களின் தற்போதைய சம்பளம் ரூ. 1,000, இனிமேல் ரூ. 4,250.

## பிரசுரம்...

(1ம்பக்கம்4கலத்தொடர்ச்சி)

'வீர அஞ்சலி' என்று வெளியிடப்பட்டிருக்கும் மேற்படி பிரசுரத்தில்; ''சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது லெப்டினன்ட் நிக்லஸ், மார்பிலும், நெற்றியிலும் துப்பாக்கிச் சூடுபட்டு உயிரிழந்தார்'' என்றும் குறிப்பிட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தாக்குதல் சம்பந்தமாக உரிமை கோரியுள்ளது.

## மோசமான...

(1-ம் பக்கம்5கலத்தொடர்ச்சி) திட்டம் தயாரிக்கிறது என்றும், ஓரிருதினங்களில் முக்கிய அறிவித்தலொன்றை தாயநாட்டு மக்களுக்கு விடுக்க விருப்பதாகவும் கூறினர்.

## கொழும்புக்கு..

(1ம்பக்கம் 3ம்கலத்தொடர்ச்சி) சபுகஸ்கந்தை எண்ணை நிலையம். களனி மின்நிலையம் உட்பட பல கேந்திரநிலையங்களைத் தாக்க திட்டமிட்டிருந்ததாகவுத் பாதுகாப்புவட்டாரங்கள் தெரிவித்தன.

## கந்தப்பளை...

[1ம்பக்க 3ம்கலத் தொடர்ச்சி) கள் தெரிந்ததே,

## பிந்திய செய்தி

கைதான ஏழுபேரும் சண்டிப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

தோட்டத்தில் தொழிலாளர் வசிக்கும் வீடொன்றில் வைத்து கைதான ஏழுபேரும் பொஸாருக்கு அளித்திருக்கும் வாக்குமூலத்தில்; தாங்கள் தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்துள்ளனர்.

## சம்பளப்பணம்..

(1ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி) கொள்ளையை நடத்தியதாக கூறப்படுகிறது.

இலங்கை வங்கியிலிருந்து பணத்தைக் கொண்டுவந்த சில நிமிடங்களில் இக் கொள்ளை நடந்ததாம்.

## ராணுவமுகாமைத்

(1ம்பக்கம்3ம்கலத்தொடர்ச்சி) வீடு ஒன்றில் கைதுசெய்யப்பட்ட பத்து இளைஞர்களில் ஒருவர் தெரிவித்த தகவலைத் தொடர்ந்தே படகு ஒன்றில் வந்த கோஷ்டி மீது விமானப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூறப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து மூதூருக்கு வந்து அங்கிருந்து மட்டுநகர் வந்து இயக்கமொன்றின் உதவியுடன் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததாகவும் பாதுகாப்பு படையினர் தரப்பில் தெரிவக்கப் பட்டது

மூதூரிலிருந்து 13 தீவிரவாதிகளுடன் வந்துகொண்டிருந்த படகுமீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டபோது 6 பேர் கொல்லப்பட்டதாகவும் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் மிகுதி 6 பேரும் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# மன்னர்—தலைமன்னர் வீதியில் தடைமுகாம்

[மன்னர்]

மன்னரிலிருந்து தலைமன்னர் துறைமுகத்திற்குச் செல்லும் பாதை தடைசெய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியால் வாகனங்கள் செல்ல முடியாது.

இராணுவத்தினரால் இத் தடைமுகாம் போடப்பட்டுள்ளது. இராணுவமுகாம், பொலிஸ்நிலையம் ஆகியவற்றின் பாதுகாப்புக் கருதியே இத்தடை போடப்பட்டுள்ளது. இதனல் பொதமக்கள் சமார் 2 மைல் தூரம் நடந்தே துறைமுகப் பகுதிக்கும், தலைமன்னர் கிராமத்திற்கும் செல்ல வேண்டியுள்ளது.

## மாணவர் பாதிப்பு

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி) கால நேர எல்லைக்குள் இன்று ஆரம்பமாகவுள்ள பரீட்சைக்குத் தோற்றவும், பரீட்சை முடிந்து வீடு செல்லவும் முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைகளின் அதிபர்கள் பரீட்சையை எப்படி நடாத்தி முடிப்பது என்று திண்டாடுகின்றனர்.

இவ்வாண்டுஇறுதிப்பொதுப் பரீட்சை இன்று செவ்வாய்க் கிழமை காலை 8-30-க்கு ஆரம்பமாகிறது. அடுத்த பாடப் பரீட்சை இன்று நண்பகல் 12-30-க்கு ஆரம்பமாகி 3 30-க்கு முடிவடைகிறது. மற்றும் 20-ம், 21-ம், 22-ம், 23-ம் திகதிகளில் பிற்பகலில் நடைபெறும் பாடப்பரீட்சைகள் 4-15-க்கே முடிவடைகின்றன

இந்த நிலையில் காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் முடிவடைவதால் அந்நேரத்துக்குப் பின்னரே மாணவர்கள் பஸ்ஸுக்குக் காத்து நின்று பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. மீண்டும் பிற்பகல் 4 மணை தொடக்கம் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்படுவதால் கடைசி பஸ்சேவையும் பிற்பகல் 2 மணியுடன் நிறுத்தப் படுகிறது. யாழ். கல்வித் திணைக்கள பரீட்சை சபையால் நிர்ணயிக்கப்பட்ட நேர சூசிகையின்படி மாணவர்கள் எப்படிப் பரீட்சைகளுக்குத் தோற்றி எழுதமுடியும்? மாணவர்கள் வீடு திரும்ப முடியும்? என்று பெற்றோர் அங்கலாய்க்கிறார்கள்.

## மர்மக் கப்பல்!

(மட்டக்களப்பு)

கல்குடாவிலிருந்து 14 தொலைவில் கடலில் காணப்படும் ஒருசப்பல் பற்றியும்அதன் அருகில் காணப்படும் நீல நிறப் படகு குறித்தும் ஆயுதப்படையினர் உஷார் நிலையில் உள்ளனர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை மேற்படி மர்மக்சப்பல் பற்றி தகவல் எதுவும்வெளியிடப் படவில்லை.

இக்கப்பல் நான்கு தினங்களாக கடலில் நிற்கிறதாம்.

## கொழும்பில் ஐவர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தையில் நேற்று இரு தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் மீது பொலிஸாரினல் கைது செய்யப்பட்டனர்.

மாளிகாவத்தை வீடமைப் புத்திட்டத்தில் ஒரு மாடி வீட்டில் வைத்து நேற்று மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

## 32 பேர் விடுதலை

(மட்டக்களப்பு)

களுதாவளையில் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு, மட்டக்களப்புபொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்சப்பட்ட 125 பேரில் நேற்று 32 பேர் விடுதலைசெய்யப்பட்டனர்.

## அச்சுவேலியில் பலத்தசோதனை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிச் சந்தியில் இராணுவத்தினர் நேற்று முற்பகல் சோதனைநடத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தர் சின்னத்தம்பி

சித்திரமேழி இளவாலையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற மலேயன் பென்சனியர் கந்தர் சின்னத்தம்பி காலமானர். இவர் சின்னம்மாவின் அன்புசகணவரும் கனகமலரின் அன்புத்தந்தையும் நீர்ப்பாசன இலாகா பன்குளம் நாகரத்தினத்தின் அன்பு மாமனரும், வன்னித்தம்பி மலேஷியா, ஆறுமுகம், காலஞ்சென்ற சின்னச்சிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், யங்கையற்செல்வம் முருகானந்தன், மோசனச்செல்வம், மோகனவிஜி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னரின் ஈமக்கிரிகைகள் 27 - 11 - 84 செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். 882

## மரண அறிவித்தல்

### சுப்பையா இராஜகஸ்தூரி

(கஸ்தூரி மாஸ்ரர்)

பிரபல எலக்ரிக்கல் மெக்கானிக் சு. இராஜகஸ்தூரி அவர்கள் காலமாகிவிட்டார். அன்னர் தங்கமலரின் அன்புக்கணவரும், சித்திரா, யசோதரா (மாணவிகள் வேம்படி மகளிர் கல்லூரி) சுபத்திரா, சுசித்திரா, சிவபாலன் (சென்மேரிஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சின்னத்துரை பாக்கியத்தின் அன்புச் சகோதரருமாவர். அன்னரின் ஈமச்சடங்குகள் செவ்வாய்க்கிழமை (27 - 11 - 84) காலை 10 மணிக்கு நடைபெற்று வில்லூண்டி மயானத்துக்கு தகனக்கிரிகைகளுக்கு எடுத்துச் செல்லப்படும்.

சி. குகேந்திரன்
(மருமகன்)

175/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 875

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.